# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | அ.சா.14 |
| Name | : | தனம் |
| Husband Name | : | ராஜூ |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 53/2025 |

**<u>தேதி : 25.03.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரி வசந்தியை எனக்கு தெரியும். மேற்படி எதிரியை தனியார் நிதி நிறுவனங்களில் கடன் வாங்கி கொடுத்த வகையில் எனக்கு தெரியும். அவர் தனது மாமனாரின் மருத்துவ செலவிற்காக கடன் வாங்கி தருமாறு கேட்டதால் நான் துறையூரிலுள்ள ஆசிர்வாதம் என்ற நிதி நிறுவனத்திலிருந்து ரூ.40,000/- பெற்று கொடுத்தேன். மேலும் ரூ.15,000/-த்தை ரொக்கமாக கையில் கொடுத்தேன். எதிரி மேற்படி கடன் தொகையை கட்டாததால் நிதி நிறுவனத்தினர் என்னிடம் வந்து தவணை தொகைகளை திரும்ப செலுத்துமாறு கூறினார்கள். எதிரியை பற்றி விசாரித்தபோது அவர் தலைமறைவாகிவிட்டார் என தெரியவந்தது.

மேற்படி நிதி நிறுவனத்திலிருந்து பெற்ற கடன் தொகைக்கான கடன் அட்டைகள் எதிரியிடமே உள்ளது. பின்னர் இதுசம்மந்தமாக என்னை போல்

பாதிக்கப்பட்ட சத்தியா என்பவர் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் அளித்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி வசந்தி எங்கள் வீட்டிற்கும் கொஞ்சம் தள்ளி உள்ளார். எதிரி எனக்கு மகளிர் சுய உதவி குழு மூலமாக கடன் வாங்கி கொடுத்துள்ளார். ரூ. 40,000/– ஐத்தை இரண்டு தவணைகளாக எதிரி வசந்தியிடம் கொடுத்தேன். அதில் எவ்வளவு தவணைகளை கட்டியுள்ளார்என்று எதிரிக்குதான் தெரியும். ரூ.15,000/–த்தை நான் வாங்கிய மகளிர் சுய உதவி குழுவிற்கு கட்ட சொல்லி கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி ரூ. 15,000/–ஐ எதிரி மகளிர் சுய உதவி கணக்கில் செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. எதிரி வசந்தி என்னை திட்டமிட்டு ஏமாற்றவில்லைஎ ன்றாலும், ஒரே நேரத்தில் அனைவரும் சேர்ந்து பணம் செலுத்தவேண்டி கொடுத்த நெருக்கடியால் எதிரி வசந்தி பணம் தவணை செலுத்த முடியவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி வசந்தி எனது தவணைகளை திரும்ப செலுத்த தயாராக இருந்தால் எனக்கு சம்மதம்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.